# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
------------
## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**Sessions Case No. 58/2013**

Deposition of witness for : **PW 8**

Name : பன்னீர் செல்வம்

Father's / Husband Name :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 10th day of July 2025.

**எதிரிகள் 1 முதல் 4 மற்றும் 6 முதல் 10, 13 ஆஜர். 12 ஆம் எதிரி ஆஜராகவில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 14 ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். (5, 11 ஆம் எதிரி இறந்து விட்டார்)**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சுவாமி விவேகானந்த மருத்துவக்கல்லூரி சட்டம் சார்ந்த மருத்துவப்பிரிவில் தலைமை பேராசரியராக பணிபுரிந்து வருகிறேன. கடந்த 23.01.2011 சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அன்று காலை 10.10 மணியளவில் பணியில் இருந்த சமயம் அஸ்தம்பட்டி காவல்நிலைய குற்ற எண் 142/2011 ல் சம்மந்தப்பட்ட திரு.செந்தில்வேல் வயது 28 என்ற ஆண் மகனின் உடலை பிரேத

பரிசோதனை செய்து, அறிக்கை தரும்படி விடுத்த வேண்டுகோள் கடிதத்தினை பெற்று மருத்துவமனை சவக்கிடங்கில் இருந்த மேற்படி பிரதேத்தை காவலர் நிலை 1 முருகேசன் என்பவர் அடையாளம் காட்ட 10.15 மணியளவில் சடலக்கூராய்வை தொடங்கினேன். மேற்படி பிணவிரைப்புததன்மை உடல் முழுவதும் காணப்பட்டது. மேறபடி சடலம் சாதாரண உடல் வாகுடன் காணப்பட்டது. மேறபடி சடலத்தில் கீழ்க்கண்ட வெளிப்புற காயங்கள் காணப்பட்டது.

1. சிராய்ப்பு காயங்கள் அடர் பழுப்பு நிறத்தில் 7 x2, 1x1, 2X1, 0.5x0.5 cm அளவில் இடது கையில் வெளிப்புறத்தில் காணப்பட்டது.

2. 2x1, 3x1, 1x1 செ.மீ அளவில் இடது முழுங்கையில் சிராய்ப்பு காயம் காணப்படடது.

3. 2x1, 3x1 செ.மீ அளவில் மெல்லிய சிராய்ப்பு காயம் காரை எலும்பில் காணப்பட்டது.

4. 9x0.25, 3x0.25, 4x0.25 செ,மீ அளவில் சிராய்பு காயங்கள் வலது புற கழுத்தின் மேல் பகுதியில் காணப்பட்டது.

5. 3x0.25, 4x0.25 செ.மீ அளவில் சிராய்ப்பு காயம் இடது புற கழுத்தின் பின்புறம் காணப்பட்டது.

6. 2.x1 செ.மீ அளவில் சிராய்ப்பு காயம் காரை எலும்பின் நடுப்பகுதியில் காணப்பட்டது.

7. ஒரு சீரான வெட்டுக்காயம் வலது புற கால் முட்டியில் முன்பகுதியில் காணப்பட்டது. அதனளவு 4x1.75x0.75 அளவில் காணப்பட்டது. இது 48 செ.மீ வலது பாதத்தின் மேல் காணப்பட்டது. மேலும் 52 செ.மீ அளவிற்கு வலதுபுற iliac எலும்பில் காணப்பட்டது.

8. ஒரு சீரான வெட்டுக்காயம் வலது புற முட்டி பகுதிக்கு முன்பகுதியில் 4x1x2 cm அளவில் காணப்பட்டது. மேற்படி காயமானது வலது பாதத்திலிருந்து 50 செ.மீ அளவில் மேலேயும். iliac பகுதியில் கீழே காணப்பட்டது.

9. ஒரு சீரான வெட்டுக்காயம் இடது புற காரை எலும்பு பகுதியின் நடுப்பகுதியில் 2.75x0.75x1 செ.மீ அளவில் காணப்பட்டது. இந்த காயமானது இடது பாதத்தில் இருந்து 140 செ.மீ மேலே காணப்பட்டது.

10. ஒரு சீரான வெட்டுக்காயம் வலது புற தாடை பகுதியில் காணப்பட்டது. அதில் வலது புற தாடை பகுதியில் இருந்து இடது புற தாடை பகுதி வரை சீரான வெட்டுக்காயம் காணப்படடது. இதன் அளவு 11x2x4 செ.மீ அளவில் காணப்பட்டது. அத்துடன் அதற்கு கீழே உள்ள mandible எலும்பில் வெட்டும் போது ஏற்பட்ட ஒரு எலும்பு முறிவு காணப்பட்டது. மற்றும் அவ்விடத்தில் உள்ள தசை பகுதிகள் இரத்த நாளங்கள் சிதைந்து காணப்பட்டது. இக்காயமானது 15 செ.மீ அளவில் நெஞ்சுக்குழி பகுதியில் இருந்து 15 செ.மீ மேலேயும் நடுத்தாடையில் இருந்து 2 செ.மீ கீழேயும் காணப்பட்டது.

11. ஒரு சீரான வெட்டுக்காயம் வலது புற தாடை பகுதியில் இருந்து நீண்டு வலது புற கழுத்து வரை காணப்பட்டது. இதன் அளவு 13x2x2.5 செ.மீ அளவில் காணப்பட்டது. இக்காயமானது 10.5 செ.மீ நடுக்காரை எலும்பின் மேல் பகுதியில் காணப்பட்டது. மற்றும் இதற்கு முன் சொன்ன காயத்திற்கு 1 செ.மீ அளவிற்கு கீழே காணப்பட்டது.

12. ஒரு சீரான வெட்டுக்காயம் போன்ற கிழிந்த காயம் வலது புற கன்னத்தில் இருந்து வலது புற கண்ணின் கீழ்பகுதி வரை காணப்பட்டது. மற்றும் அவ்விடத்தில் உள்ள வலது புற maxillary எலும்பு மற்றும் mandibular

எலும்பு முறிந்து காணப்பட்டது. மற்றும் அவ்விடத்தில் உள்ள தசைப்பகுதி இரத்த நாளங்கள் சிதைந்து காணப்பட்டது. இக்காயமானது இதற்கு முன் சொன்ன காயத்திற்கு 3 செ.மீ க்கு கீழேயும், வலது புற காரை எலும்பின் மேல் புறம் காணப்பட்டது.

13. ஒரு சீரான வெட்டுக்காயம் இடது புற கீழ் உதட்டில் இருந்து நீண்டு வலது புற இதழ்களில் காணப்பட்டது. இதனளவு 7.5x5 செ,மீ எலும்பின் ஆழம் வரை காணப்பட்டது. மற்றும் அவ்விடத்தில் உள்ள வலது maxillary எலும்பு ஆழம் வரை காணப்பட்டது. இந்த காயமானது நெஞ்சு குழியில் இருந்து மேலே 20.5 செமீ அளவில் மற்றும் மூக்கின் மேல்பகுதியில் இரருந்து 11.5 செ.மீ அளவில் கீழேயும் காணப்பட்டது.

14. ஒரு சீவினால் போன்ற ஒரு வெட்டுக்காயம் வலதுபுறம் தாடைப்பகுதியில் காணப்பட்டது. இதன் அளவு 8x1.5x1 செ.மீ ஆகும்.இந்த காயமானது நீண்டு வலது காதின் மடல் வரை காணப்பட்டது. அந்த காதில் உள்ள cartilage எலும்பில் முறிவு காணப்பட்டது. இந்த காயமானது முன்னே கூறிய காயத்தில்இருந்த 2 செ.மீ அளவிற்கு கீழே வரை காணப்பட்டது.

15. ஒரு வெட்டுக்காயம் போன்ற கிழிந்த காயம் வலது புற நெற்றி பகுதியில் காணப்பட்டது. இக்காயமானது நீண்டு வலது புற கண்களில் கீழ் இமைகள் வரை காணப்பட்டது. இதனளவு 9x1.5x எலும்பின் ஆழம் வரை காணப்பட்டது. மற்றும் அவ்விடத்தில் உள்ள நெற்றி எலும்பு மற்றும் கண்ணின் கீழ்புறம் உள்ள எலும்பு முறிவு காணப்பட்டது. மற்றும் இரண்டு கண் இமைகளிலும் காயம் காணப்பட்டது. வலது புற கண் காணப்படவில்லை.

16. ஒரு சீவினால் போன்ற ஒரு வெட்டுக்காயம் நெற்றி எலும்பின் நடுப்பகுதியில் காணப்பட்டது. இது நீண்டு மூக்கின் ஆரம்ப புள்ளி வரை

காணப்பட்டது. இதனளவு 7x0.25x எலும்பு ஆழம் வரை காணப்பட்டது. அவ்விடத்தில் உள்ள நெற்றி எலும்பு மற்றும் மூக்கின் ஆரம்ப பகுதியில் உள்ள எலும்பு முறிவு ஏற்பட்டது. வலது புற முகம் சிதைந்து காணப்பட்டது.

17. ஒரு சீரான சீவினால் போன்ற வெட்டுக்காயம் வலது புற உதட்டின் பகுதியில் இருந்து நீண்டு இடதுபுற காது வரை காணப்பட்டது. அதன் அளவு 22x4x எலும்பு ஆழம் வரை காணப்பட்டது மற்றும் வெட்டினால் ஏற்படும் எலும்பு முறிவு அவ்விடத்தில் உள்ள மூக்கு எலும்பு வரை மற்றும் இடது புற காதின் மடலில் cartilage எலும்பு முறிவு காணப்பட்டது.

18. ஒரு சீரான வெட்டுக்காயம் இடது புற நெற்றி பகுதியில் காணப்பட்டது. இதன் அளவு 2.5x0.5x எலும்பு ஆழம் வரை காணப்பட்டது. இடது புருவத்தில் இருந்து 0.5 செ.மீ அளவிற்கு மேலே காணப்பட்டது.

19. ஒரு சீரான வெட்டுக்காயம் இடது புற நெற்றி பகுதியின் மேற்பகுதியில் காணப்பட்டது. அதன் அளவு 3.5x0.5x எலும்பு ஆழம் வரை காணப்பட்டது.

20. ஒரு சீரான வெட்டுக்காயம் தலையின் வலது புற பக்கவாட்டில் காணப்பட்டது. அதன் அளவு 7x0.5x எலும்பு ஆழம் வரை காணப்பட்டது. மற்றும் வலது புற temporal region முறிவு காணப்பட்டது.

21. ஒரு கிழிந்த காயம் தலையின் மேல் பகுதியில் இடது புறத்தில் காணப்பட்டது. இதன் அளவு 2x0.5x எலும்பு ஆழம் வரை காணப்பட்டது.

தலைப்பகுதியை ஆய்வு செய்த போது கபாலத்தின் மேல் உள்ள தோலின் அடிப்பகுதியில் நெற்றி பகுதி மற்றும் இரண்டு பக்கவாட்டிலும் மற்றும் temporal சதை பகுதி கன்றி காணப்பட்டது. மற்றும் ஒரு குவிந்தால் போல் எலும்பு முறிவும் சேர்ந்து காணப்பட்டது. இக்காயமானது நெற்றி

பகுதியில் காணப்பட்டது. இதன் அளவு 12x6 செ.மீ.

மூளையில் arachnoid இரத்தக்கசிவு வலது புறம் முழுமையாக காணப்பட்டது. கபாலத்தின் அடிப்பகுதியில் ஒரு எலும்பு முறிவு வலது புற நெற்றி பகுதி வரை நீண்டு வலது புற middle cranial fossa மற்றும் இடது cranial fossa எலும்பு முறிவு 6 செ.மீ அளவில் காணப்பட்டது.

கழுத்து பகுதியை ஆய்வு செய்து போது, மூச்சுக்குழல் வெட்டுப்பட்டு காணப்பட்டது. மற்றும் வலது புற hyoid எலும்பில் greater horn பகுதியில் எலும்பு முறிவு காணப்பட்டது. மற்றும் வலது புற கழுத்து பகுதியின் தசைபகுதி கன்றி காணப்பட்டது. மற்றும் cervical vertebral ல் வெட்டுக்காயம் காணப்பட்டடது மற்றும் அதன் அருகில் உள்ள தசை பகுதி கன்றி காணப்பட்டது.

நெஞ்சு பகுதியை ஆய்வு செய்த போது விலா எலும்பில் முறிவு எதுவும் காணப்படவில்லை. நுரையீரலில் இருபுறமும் வெளிறி காணப்பட்டது.

இருதயம் சாதாரண அளவுடையதாககவும், அதன் அறையில் திரவ இரத்தம் நிரம்பி காணப்பட்டது. இருதய வால்வு மற்றும் தமனிகள் நன்றாக இருந்தன.

வயிற்று பகுதியை ஆய்வு செய்து இரைப்பையில் 110 கிராம் பாதி செரிமானமான சமைக்கப்பட்ட உணவு காணப்பட்டது. அதில் குறிப்பிடும் படியான வாசனை எதுவும் இல்லை. இரைப்பையில் mucossa பகுதி வெளிறி காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சீறுநீரகங்கள் வெளிறி காணப்பட்டன. மற்றும், மலக்குடல் சாதாரண நிலையில்இருந்தது. இடுப்பு எலும்பு நன்றாக இருந்தது. பிறப்புறுப்பு பகுதியில் காயம் எதுவும் இல்லை.

இவர் உடல் பாகங்கள் சேகரிக்கப்பட்டு இராசாயண பகுப்பாய்வுக்கு அனுப்பபட்டு அறிக்கையின் அடிப்படையில் உடலில் முக்கிய அவையங்களில் நச்சு பொருள் எதுவும் காணப்படவில்லை. இறுதி கருத்தாக இறந்த நபர் அவருக்கு ஏறப்ட்ட பலதரப்பட்ட காயங்களினாலும், இரத்தப்போக்கினாலும், அதிர்ச்சியின் காரணமாக மேற்படியார் இறந்திருக்கக்கூடும் என கருத்துரை வழங்கி அளித்த பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ 24.** நான் வழங்கிய இறுதி கருத்துரை **அ.சா.ஆ.25.**

என்னிடம் காட்டப்படுகின்ற சா.பொ.1 முதல் 21 வரையிலான ஆயுதங்களால் தாக்கப்படும் போது இறந்து போன நபருக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உண்டு. இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1, 6, 7 ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

இறந்து போன நபரில் முதுகு புறம் காயம் எதுவும் இருந்ததாக அ.சா..ஆ 24 ல் நான் குறிப்பிட்டிருக்கவில்லை என்றால் சரிதான. இறந்து போன நபரின் உடலில் கண்ணாடி துகள்கள் ஏதாவது இருந்துதாக அசா.ஆ.24 ல் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

**3 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

அ,சா.ஆ 24 ல் spinal column intact என குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். vertibral column என்பதும் spinal column என்பதும் ஒன்றுதானே என்றால் ஒன்று தான்.

**கேள்வி –** vertibral column என்பது இடுப்பு பகுதியில் இருந்து முதுகெலும்புகள் ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டு அது கழுத்து வழியாக கபாலத்த்தை இணைக்கக்கூடிய உறுப்பு என்று சொன்னால்

**பதில் –** vertibral column என்பது cervical எலும்பில் இருந்து thorocic எலும்பு மற்றும் vertibral எலும்பு வரை தொடர்ந்து காணப்படுவது.

cervical fracture நான் அசாஆ.24 ல் குறிப்பிட்டுள்ள நிலையில் spinal column intact என்று நான் சொல்லியுள்ள சங்கதி ஒன்றுக்கொன்று முரணனாது என்றால் சரிதான். தவறுதலாக குறிப்பிட்டுள்ளேன்.

இறந்து போன நபரின் இறப்பானது அதிர்ச்சியினால் ஏற்பட்டதா அல்லது இரத்தப்போக்கினால் ஏறப்ட்டதாக தனித்தனியாகவோ அல்லது கூட்டு விளைவின் காரணமாக ஏற்பட்டதாக என்னுடைய கருத்துரை அசா.ஆ 25 ல் விளக்கி சொல்லியுள்ளேன் என்றால் மேற்படியாரின் இறப்பானது அவருக்கு ஏற்பட்ட பலதரப்பட்டட காயங்கள், அதிர்ச்சிமற்றும் இரத்தப்போக்கின் காரணமாக ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன்.

**கேள்வி –** குறிப்பாக எந்த பகுதியில் அதிர்ச்சி மற்றும் இரத்தப்போக்கினால் இறப்பு நேர்ந்தது என குறிப்பாக பலதரப்பட்ட காயங்களின் இரத்தப்போக்கு மற்றும் அதிர்ச்சியின் காரணமாக ஏறப்ட்டதகா சொல்லியுள்ளேன். பலதரப்பட்ட காயங்கள் என்பதாக குறிப்பான பகுதி என்று குறிப்பிட இயலாது,.

பொதுவாக ஒரு நபர் அதிக ரத்தப்போக்கு மற்றும் அதிர்ச்சியின் காரணமாக இறக்க நேரும் போது, மேற்படி அதிர்ச்சி மற்றும் இரத்தப்போக்கின் தாக்கம் இருதயம், நுரையீரல், சிறுநீரகங்கள், கல்லீரல் மற்றும் மண்ணீரலில் அதிர்ச்சியின் விளைவுகள் காணப்படும் என்றாலும் ஆனால் அவ்வாறு மேற்கண்ட உறுப்புகளில் அதிர்ச்சியின் விளைவுகள் ஏதாவது இருந்துதாக என்னுடைய சான்று அசாஆ.24 மற்றும் அசாஆ 25 ல் நான் குறிப்பிட்டுருக்கவில்லை என்று சொன்னால்., சரியல்ல நான் குறிப்பிட்டுள்ளேன்,

அவ்வாறு நான் என்னுடைய சான்று அசாஆ 24 மற்றும் 25 ல் குறிப்பிட்டுருக்கவில்லை என்றாலும் அவ்வாறு நான் குறிப்பிட்டுள்ள விவரம் மருத்துவ இயல்புக்கு முரணானது என்று சொன்னாலும் சரியல்ல.

உங்களுடைய சான்று அசாஆ 24 மற்றும் 25 ல் காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயங்கள் பலதரப்பட்ட ஆயுதங்களால் தாக்கப்படும் போது ஏற்பட சாத்தியக்கூறுகள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் அவ்வாறு குறிப்பிடவில்லை, அவ்வாறு குறிப்பிடும் வழக்கம் இல்லை.

உங்களுடைய முதல் விசாரணையில் சா.பொ.1 முதல் 21 வரையிலான ஆயுதங்களால் தாக்கப்படும் போது இறந்து போன நபருக்கு ஏறப்பட்ட காயங்கள் போல ஏற்பட வாய்ப்புள்ளதாக நீங்கள் சொல்லியுள்ள சங்கதி மருத்துவ இயல்பு படி ஏற்படையது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

உங்களுடைய சான்று அசாஆ 24 மற்றும் 25 ல் போலிசார் சா.பொ,1 முதல் 21 வரையிலான ஆயுதங்களை காட்டி கருத்துரை எதுவும் பெற்றதாக உங்களால் சொல்லப்படாத நிலையில் பின்னிட்டு நீதிமன்றத்தில் அவ்வாறு நீங்கள் சாட்சியமளிக்க இயலாது என்று சொன்னால் சரியல்ல.

அசா.ஆ.24 ல் 1, 2 காயங்கள் சிராய்ப்பு காயங்கள் எனறு குறிப்பிட்டு விட்டு ஏனைய காயங்கள் வெட்டுக்காயங்கள் என்று சான்று வழங்கி சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

உங்களுடைய சான்று அசாஆ 24 ல் (all injuries are wide opened, with edges clean cut and accute margins) என்று குறிப்பிட்டுள்ள சங்கதி 1, 2 காயங்கள் எதிராக காணப்படுகிறது என்று சொன்னால் மேற்படி

என்னுடைய குறிப்பில் குறிப்பாக காயத்தின் நம்பரை குறிப்பிடவில்லை. ஆனால் காயங்களின் தன்மை பற்றி குறிப்பிட்டுள்ளேன்.

உங்களுடைய சான்று அசாஆ 24 மற்றும் 25 ல் இறந்து போன நபரின் இறப்பு ஏற்ப்ட்டிருக்கும் காலத்தை குறிப்பிடவில்லை என்றால், சரிதான். ஆனால் நான் என்னுடைய சடலக்கூராய்வு அறிக்கை சான்றில் அசாஆ.24 ல் பிணவிறைப்புத்தன்மை உடல் முழுவதும் காணப்பட்டதாக குறிப்பிட்டுள்ள நிலையில் மருத்துவ இயல்பு படி சடலக்கூராய்விற்கு முன்பு இறந்து போன நபர் 24 மணி நேரத்திற்கு முன்பாக இறந்திருக்கக்கூடும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

உங்களுடைய சான்று அசாஆ 24 மற்றும் 25 முன்னுக்கு பின் முரணாக அது அரசு தரப்பு வழக்கிற்கு எந்த வகையிலும் சாதகமாக இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**13 எதிரி தரப்பு வழக்கறிஞர் 1, 6, 7 எதிரிகள் தரப்பில் முன்வைக்கப்பட்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்ளப்பட்டதாக முன்வைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**2, 4 ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

ஒரு ஆயுதத்தின் ஒரு பக்கம் கூர்மையான மற்றும் மறு பக்கம் மலுங்கிய தன்மை கொண்ட நிலையில் தாக்கப்படும் போது அதனால் ஏற்படும் காயத்தின் தன்மையும் ஒரு பக்கம் சீராகவும் மற்றும் மறு பக்கம் சீரற்றும் காணப்படும் என்றால் சரிதான். சா.பொ.1 முதல் 15, 18 முதல் 21 வரையிலான ஆயுதங்கள் அனைத்தும் ஒரு பக்கம் கூர்மையான மற்றும் மறு பக்கம் மலுங்கிய நிலையும் உள்ளது என்று சொன்னால் சரிதான். சா.பொ.1 முதல் 15, 18 முதல் 21 வரையிலான ஆயுதங்கள் மூலம்

தாக்கப்படும் போது ஒருபுறம் சீரான காயமும் மறுபக்கம் சீரற்ற காயமும் ஏற்படவாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

போலிசார் என்னை விசாரணை செய்த போது சா.பொ.1 முதல் 21 வரையிலான ஆயுதங்கள் காண்பித்து கருததுரை பெற்றதாக நான் குறிப்பிட்டுருக்கவில்லை என்றால் சரிதான்.

**12 ஆம் எதிரி தரப்பு வழக்கறிஞர் 1,6,7 மற்றும் 2, 4 எதிரிகள் தரப்பில் முன்வைக்கப்பட்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்ளப்பட்டதாக முன்வைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**8, 9, 10, 14 ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

3 ஆம் எதிரிகள் தரப்பில் முன்வைக்கப்பட்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக எடுத்துரைக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது. மேலும் சில குறுக்கு விசாரணை முன் வைக்கப்படுகிறது.

காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட சிராய்ப்பு காயங்கள் சொரசொரப்பான பகுதியில் உரசும் போது ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான்.

காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட சிராய்ப்பு காயங்கள் போல சா.பொ.,1 முதல் 21 வரையிலானஆயுதங்கள் மூலம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் சா.பொ.1 முதல் 15, 18 முதல் 21 வரையிலான ஆயுதங்களின் பின்பகுதியினாலும் ஏற்படவும் மற்றும் 16, 17 ஆயுதங்களினால் தாக்கப்படும் போது ஏற்பட வாய்ப்புள்ளது

இறந்து போன நபரின் பின்புறம் எந்த விதமான சிராய்ப்பு காயமோ, வெட்டுக்காயமோ ஏற்படவிலலை என்றால் சரிதான்.

இறந்து போன நபர் தாக்கப்படும் போது தன்னை தற்காத்து கொள்ள முயலும் போது காயம் எதுவும் ஏற்பட்டதாக தடையம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல, கையின் முழங்கையில் காணப்படுகிறது.

இறந்து போன நபரின் உடலில் முன்பகுதியில் மட்டும் காயங்கள் காணப்படுவதால் மேற்படி காயங்கள் ஒரே நபரால் தாக்கப்பட்டு ஏற்பட வாய்ப்புள்ளது என்று சொன்னால் சரியல்ல.

இறந்த போன நபருக்கு ஏற்பட்ட காயங்களில் எந்த காயம் முதலில் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்ல இயலுமா என்றால் சொல்ல இயலாது.

காயம்பட்ட நபருக்கு குறிப்பாக சுயநினைவை இழக்க நேர்ந்தது என்று குறிப்பிட்டு சொல்ல இயலாது.

இறந்து போன நபருக்கு ஏற்ப்படட காயத்தின் தன்மைகளை பொறுத்து அவர் தாக்கப்படும் போது அவர் எந்த நிலையில் அதாவது நின்று கொண்டிருந்தாரா அல்லது உட்காந்து கொண்டிருந்தாரா என்று குறிப்பிட்டு சொல்ல இயலுமா என்றால் அவருக்கு பலதரப்பட்ட காயங்கள் ஏற்பட்டுள்ளதால் அவ்வாறு குறிப்பிட்டு சொல்லஇயலாது.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

### Sessions Case No. 58/2013

Deposition of witness for : PW9

Name : இரசாத்

Father's / Husband Name :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 10th day of July 2025.

**எதிரிகள் 1 முதல் 4 மற்றும் 6 முதல் 10, 13 ஆஜர். 12 ஆம் எதிரி ஆஜராகவில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 14 ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். (5, 11 ஆம் எதிரி இறந்து விட்டார்)**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது தீவட்டிப்பட்டியில் வசித்து வருகிறேன். செருப்பு கடை வைத்துள்ளேன். கடந்த 2011 ல் தீவட்டிப்பட்டியில் உள்ள குமார் சைக்கிள் ஸ்டான்டில் வேலை செய்து வந்தேன். ஆஜர் எதிரிகளை பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு பற்றியும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில், சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரியதன் பேரில், ஆவணங்கள் பரிசீலனைக்கு பிறகு, சாட்சி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–**

கடந்த 22.01.2011 ஆம் தேதி இரவு 09.30 மணியளவில் நான் குமார் சைக்கில் ஸ்டாண்டில் பணியில் இருந்த போது அன்றிரவு சுமார் 11 மணியளவில் ஒரு நபர் பஜாஜ் சிடி 100 TN30–L8105 என்ற மோட்டார் சைக்கிளை எங்கள் சைக்கிள் ஸ்டான்டில் நிறுத்தினார் என்றும், அந்த வாகனத்தை ஒருவார காலமாக யாரும் எடுத்துச்செல்லவில்லை என்றும், 02.02.2011 ம் தேதி நானும் எனது பார்ட்னர் குமாரும் சைக்கிள் ஸ்டான்டில் இருந்த போது அஸ்தம்பட்டி போலிசாருடன் கரிகாலன்( A2) என்பவர் எங்கள் சைக்கிள் ஸ்டான்டிற்கு முன்பு மேற்கண்ட இருசக்கர வாகனத்தை அடையாளம் காட்டி சாட்சிகள் முன்னிலையில் போலிசாரிடம் ஆஜர் செய்தார் என்றும், அது சம்மந்தமாக சாட்சிகளிடமும் கையொப்பம் பெற்றார் என்றும் நான் போலிசார் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது எதிரிக்கு பயந்து உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/– S. எழில்வேலவன்,

இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

சேலம்.